DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 60/2023 |
| Deposition of witness | : | PW- 6 |
| Name | : | பிரதீபா |
| Father's /Husband Name | : | ஸ்ரீ பிரியதர்சன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 30 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day June 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.01.2023- ம் தேதி காலை 08.05 மணியளவில் நான் நன்னிலம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது தென்னஞ்சார் ரவி என்பவரது மகன் வெங்கடேஷ் என்பவர் அவரது தாயார் வனிதா என்பவருடன் என்னிடம் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை நான் விசாரித்த போது அன்று காலை 07.00 மணியளவில் தென்னஞ்சார் பாலம் அருகில் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னை கையாலும், கட்டையாலும் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரது வலது ஆள்காட்டி விரலில் நகத்தை தூக்கியவாறு சிதைந்த காயம் இருந்தது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்தேன். தற்போது என்னிடத்தில் விபத்து பதிவேடு நான் பதிவு செய்யப்பட்டது. அ.சா.1-க்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியவகையில் தாக்கப்பட்டால் அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

மேற்படி விபத்து பதிவேடானது வெங்கடேஷ் என்பவரது தொடர்பாக பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபர் வெங்கடேஷ் 14.01.2023 மற்றும் 15.01.2023 ஆகிய தேதிகளில் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி நபருக்கு கட்டைவிரலில் காயம் இருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் நிலைதடுமாறி கீழே விழுந்தால் தலைக்கு பின்பக்கத்தில் காயம் ஏற்படும் என்றால் சரிதான். மேற்படி நபர் வெங்கடேஷ் அவ்வாறு விழுந்திருந்தாலும், அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட்ட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல, நிலைதடுமாறி கீழே விழுந்தால் அவ்வாறு காயம் ஏற்படாது. போலிசார் ஆயுதங்கள் எதையும் காண்பித்து விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் பொய் சாட்சிமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.